17th September 1958]

(c) The total number of Harijan students who studied in 1957 and 1958 in all the three B.Sc. (Ag.) degree classes was 7 and 8, respectively.

Sri P. G. MANICKAM : இப்போது குறிப்பிடப்பட்ட வருஷங்களில் இப்பயிற்சிக்காக எத்தனை ஹரிஜன மாணவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள் ? அவர்களில் எத்தனை பேர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

Sri K. VINAYAKAM : Since there is an unprecedented rush of students to such technical institutions, will the Government consider the possibility of having one or two more colleges? If that cannot be done immediately, will they at least increase the number of seats in the existing College at Coimbatore?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The strength of the College has been increased to 162. The Annamalai University has also started an agricultural course quite recently.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுறையில் ஒரு விவசாயப் பண்ணை நன்றாக நடந்துவருகிறது. மேலும், அங்கே கிராம சேவக்குகளுக்கு விவசாயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க போதுமான வசதி இருப்பதால், அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வற்புறுத்தப்பட்டதா ? அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவ சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் கல்லூரி அங்கே எப்போது நிறுவப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரி யோசனை கூறப்பட்டது. ஆனால், சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்போது ஒரு விவசாயக் கல்லூரி துவக்கப்பட்டிருப்பதால் அந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

Sri N. MARUDACHALAM : விவசாயக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்கள், உரிய காலங்களில் தங்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கவில்லை என்று சர்க்காருக்கு புகார் செய்திருக்கிறார்களா ? சர்க்காருக்கு அவ்வாறு கடிதம் அனுப்பித்திருக்கிறார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

Srimathi T. N. ANANDANAYAKI : இந்த ராஜ்யத்திலுள்ள விவசாயக் கல்லூரியில் இப்போது எத்தனை பெண்கள் படிக்கிறார்கள் ? பெண்கள் அக்கல்லூரிக்கு விண்ணப்பம் போட்டு சேர்க்கப்படவில்லையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அக்கல்லூரிக்கு தகுதியுடைய பெண்கள் விண்ணப்பம் போட்டிருந்தால் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். பெண்கள் அக்கல்லூரியில் சேருவதற்குத் தடை இல்லை. அந்தக் கல்லூரியில் இப்போது சில பெண்கள் படிக்கிறார்கள். ஆனால் எத்தனை பெண்கள் படிக்கிறார்கள் என்று விவரம் என்னிடம் இப்போது இல்லை.

Trade Disputes

• 260 Q.—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of trade disputes reported to Government for adjudication in 1957–58; and

TRUTH ALONE TRIUMPHS

(*b*) how many of them—

(i) were settled; and

(ii) are still pending?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) During the period from 1st April 1957 to 31st March 1958—

Number of disputes taken up for conciliation	...	1,013
Number of disputes settled by conciliation ...	...	632
Number of disputes referred for adjudication	...	272
Number of disputes where reference was refused.		82
Number of disputes pending consideration with Government	... ...	27

This is for the period from 1st April 1957 to 31st March 1958.

* 261 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of labour disputes settled by conciliation in 1957; and

(*b*) the number of disputes pending settlement before the industrial tribunals?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1,757.

(*b*) Eighty-eight disputes were pending before the Industrial Tribunal, Madras, and Labour Courts at Madras, Madurai and Coimbatore at the end of 1957.

SRI M. KALYANASUNDARAM : மொத்தத் தகராறுகளில் எத்தனை தகராறுகளில், பழிவாங்கும் நோக்கத்துடன் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்ற புள்ளிவிவரம் சர்க்காரிடம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மூலக் கேள்வியில், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் எத்தனை என்று கேட்கப்பட்டிருந்தது. 1957-ல் " இண்டிவிஜுவல் க்ரீவன்ஸ், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ்" முதலிய எல்லாம் சேர்ந்து மொத்தம் 8,592 " க்ரிவன்ஸெஸ் ". அவைகளில் 6,524 " இண்டிவிஜுவல் கம்ப்ளெய்ண்ட்ஸ்" ; 1,757 தான் " இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ்."

SRI S. LAZAR : What is the average time taken by the Government for the disposal of cases—from the time the matter is taken up by the Government for conciliation until it is disposed of by the Tribunal? Is there any proposal before the Government for reducing the time-limit?

THE HON. SRI R. VENKATARAMAN : In cases of individual disputes, it is three months. In cases of industrial disputes without complications, it is four to five months. But where there are rival unions and complications, it depends on the nature of the dispute.

SRI J. MATHA GOWDER : முதலாளிகளும் சர்க்காரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து முக்கூட்டுக் கூட்டம் நடத்தி சமரசத்தை ஏற்படுத்திய பிறகு, சர்க்கார் செய்த சிபாரிசை முதலாளிகள் சங்கம் அமுல் நடத்தாவிட்டால், சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் ?